2072

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016


| தரம் : 07 | செயல்முறைத் தொழினுட்பம்<br>பெயர் / சுட்டெண் : ............................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி - I**

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

01. கழிவுப் பொருட்களைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்வோம் என்பதில் சிதைவடையாதவை என நாம் குறிப்பிடுவது
    1) பழத்தோல் 2) தேங்காய்ப்பூ
    3) கண்ணாடி 4) சருகு

02. சில பயிர்களை பிடுங்கி நாட்டும் போது வேர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தாங்க முடியாத பயிர்களின் வித்துக்கள் நேரடியாகவே தோட்டத்தில் நாட்டப்படும். அவ்வாறான பயிர் வகை எது?
    1) கத்தரி, மிளகாய் 2) பூசணி, பாகல்
    3) தக்காளி, மிளகாய் 4) கத்தரி, தக்காளி

03. 
    கணினி மென்பொருளைப் பயன்படுத்தி எளிய சுற்றினை உருவாக்குதல் படத்தில் காட்டப்படும் அடையாளம்
    1) அளிப்பாங்கு 2) நீக்கல்பாங்கு
    3) சுழலச்செய்யும்பாங்கு 4) கட்டுப்பாட்டுப் பலகை

04. கணினி மென்பொருளைப் பயன்படுத்தி எளிமையான மின் சுற்றினை நாம் இன்று உருவாக்க உதவும் மென்பொருள்
    1) V - lab Electricity (வீலாப் எலற்றிசிற்றி)
    2) Libre Office writer
    3) MS Word
    4) CEB

05. உடல் வளர்ச்சிக்கு அவசியமான போசனைப் பெறுமானம் எது?
    1) காபோவைதரேட்டு 2) புரதம்
    3) விற்றமின்கள் 4) கனியுப்பு

06. 

    அருகில் படத்தில் காட்டப்பட்ட குறியீடு இலத்திரனியல் துணைக் கூறுகளில் எதனைக் குறிக்கும்?
    1) உலர் மின்கலம் 2) ஒலிபெருக்கி
    3) மின்குமிழ் 4) மின்மோட்டர்



kalvi.lk

07. உயிரற்ற தடைகளை ஏற்படுத்தல் மூலம் மண்ணரிப்பை தடுக்க முடியும் அவ்வகையில் மழைத்துளிகள் விழுவதனால் மண் துணிக்கை வேறாவதை குறைக்க நாம் செய்யக் கூடியது

1) கயிற்றுப் பாய் போடுதல். வைக்கோல் போடல்
2) சாக்கு விரித்தல், கிடுகு போடல்.
3) பொலித்தீன் தாழ் விரித்தல்.
4) மேற்கூறிய யாவும் சரி

08. இலைவகை, கோவா, சலாது இலை போன்றவற்றை கழுவி நீரை வடிய விடப் பயன்படுவது

1) கொலண்டர் (Colander)
2) வடிகட்டி (Strainer)
3) பழச்சாறு பிழியும் கருவி (Juice Extractor)
4) அரிதட்டு (Seive)

09. முற்பரிகாப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலம் உணவு வகைகளின் நிறமாற்றத்தை தவிர்க்கலாம். இதற்காக நாம் செய்யும் முறை அல்லாதது

1) சீனிப் பாகிடல்
2) காற்றோட்டம் பட வைத்தல்.
3) எலும்பிச்சை பழச்சாறு சேர்த்தல்.
4) வெட்டிய மூலப்பொருட்களை நீரிலோ அல்லது தேங்காய்ப் பாலிலோ அமிழ்த்துதல்.

10. மின்னை தற்காலிகமாக களஞ்சியப்படுத்தி வைக்கப் பயன்படுவது

1) கொள்ளளவி
2) தடையி
3) திரான்சிஸ்ரர்
4) LDR

11. பாதுகாப்பான பணக்கொடுப்பனவுகளுக்கு இன்று இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொள்ள நவீன உலகில் அனேக மக்களினால் பயன்படுத்தப்படுவது

1) இலத்திரனியல் அட்டைகள்
2) மணிக்கிறாம் சேவைகள்
3) பல்வேறு உண்டியல்கள்
4) வங்கி காசோலைசார் விடயங்கள்

12. தனியாள் உரிமை வணிகத்தின் அனுகூலமான பண்பாகக் குறிப்பிட முடியாதது

1) சிறிதளவு மூலதனத்துடன் ஆரம்பிக்க முடியும்.
2) வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் இலாபம் முழுவதும் உரிமையாளருக்கே.
3) தனிநபர் திறமை, திறன் என்பன நன்கு விருத்தி அடையும்.
4) வணிகத்தின் நட்டம் ஏற்படும் போது உரிமையாளர் அதனை தனித்து பொறுப்பேற்க வேண்டி ஏற்படும்.

13. சாடிகள், நாற்றுச்சாடியின் அடியில் துளையிடுவதன் பிரதான நோக்கம்

1) பயன்தரு உயிர்கள் சாடிக்குள் உட்பிரவேசிக்க
2) நாற்றுச் சாடியிற்கு வளி கிடைக்க.
3) மேலதிக நீர் வழிந்தோட வேண்டும் என்பதற்காக
4) வேர் வெளியே வர வேண்டும் என்பதற்காக

14. வித்துக்கள் முளைப்பதற்கு தேவையான நீரை அகத்துறிஞ்சிக் கொள்வதற்கெனத் வித்துக்களை நீரில் ஊறவிடப்பட வேண்டும். அவ்வாறு ஊற விட எவ்வளவு நேரம் தேவை

1) 3 மணி
2) 5 மணி
3) 8 மணி
4) 12 மணி



kalvi.lk

15. வீட்டுக் கழிவை அகற்ற மிகச் சிறந்த முறையாகக் குறிப்பிடக் கூடியது
1) றோட்டில் போடுதல்.
2) எரியூட்டுதல்
3) கூட்டுப்பசளை தயாரித்தல்
4) புதைத்தல்

16. வணிக நடவடிக்கை என்பதன் மூலம் சந்தைக்குப் பொருட்களையும் சேவைகளையும் வழங்கும் நபர்களை சிறப்பாக எவ்வாறு அழைப்போம்?
1) கொள்வனவாளர்கள்
2) விற்பனையார்கள்
3) வழங்குநர்கள்
4) முதலாளிமார்

17. சிவராம் வீட்டின் நீர் திருகுபிடி (TAP) அவனது தம்பி தினமும் திருப்பி, முறுக்கி விளையாடு வதனால் நீர் திருகுபிடியின் வால்வுக் குதைப் பகுதியில் இருந்து சிறிய நீர் கசிவு சிந்தத் தொடங்கியதும் சிவராம் தான் இம்முறை PTS பாடத்தில் செய்முறையாக செய்த செயற் பாட்டை வீட்டில் பிரயோகித்து வெற்றி கண்டான் சிவராமால் செய்யப்பட்டது.
1) புதிய வால்வுக் குதை, சீர் திருகுபிடி வேண்டி போட்டது.
2) குறித்த நீர் திருகுபிடியை பாவிக்காது பொலித்தீன் பையினால் மூடிக் கட்டி விட்டமை.
3) அருகில் இருக்கும் குழாய் பொருத்தும் (பிளம்பர்) மாமாவை வீட்டுக்கு அழைத்து குறித்த பிழையைத் திருத்தியது.
4) குறித்த நீர் திருகுபிடியின் வால்வு குதையுடன் பொருத்தும் பகுதிக்கு "புரியிடை நாடா" சுற்றி மீண்டும் அதே நீர் திருகுபிடியை போடுதல்.

18. பூக்கும் தாவரம் அல்லாது எது?
1) அந்தூரியம்
2) போகன்விலா
3) பன்னத் தாவரம்
4) செவ்வரத்தை

19. மல்லிகை, காபீனியா, வெசாக்பூ போன்ற தாவரங்களை தரையலங்கரிப்பில் பயன்படுத்துவதன் பிரதான நோக்கம்
1) உணவுக்காக பயன்படல்
2) சூழலை நறுமண் கொண்ட தாக்குதல்
3) நிழல் கிடைத்தல்
4) பொருத்தமற்ற இடங்களை மறைக்க

20. தடையிகளின் தடைப் பெறுமானம் எவ்வாறு குறிப்பிடப்படும்
1) ஓம் ($\Omega$ )
2) W ( (வாட்ஸ்)
3) V (வோல்ட்)
4) LED

(20 x 1 = 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

* முதலாம் வினா உட்பட, ஏனைய இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக.

* செயன்முறைத் தொழினுட்பத்திறன் பாடத்தில் விடையளிக்கும் போது கூடிய அளவு படவிளக்கம் எதிர்பாக்கப்படுகிறது.

01. 1) தரம் - 7 செயன்முறைத் தொழினுட்பத்திறன்கள் பாடத்தில் நீங்கள் விரும்பி ஆர்வத்துடன் செய்த செய்முறைகள் மூன்று தருக.

2) நீங்கள் செய்த செய்முறை செயற்பாடொன்றினைக் குறிப்பிட்டு அதனால் நீங்கள் பெறும் நன்மைகள் எவை எனக் குறிப்பிடுக.

3) மேலே குறிப்பிட்ட செய்முறையின் போது நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் எவை?

4) நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினையை தீர்ப்பதற்கு உங்களுக்கு உதவி புரிந்தவர்கள் யார்?

5) நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினையை எவ்வாறு தீர்வு கண்டீர்கள்?

02. 1) நாற்றுச் சாடிகளாகப் பயன்படுத்தக் கூடிய பொருட்கள் மூன்று தருக.

2) தரையலங்கரிப்பில் தாவரங்களைப் பயன்படுத்துவதன் நோக்கங்கள் எவை?

3) தரை அலங்கரிப்பில் பயன்படுத்தப்படும் வன்கூறுகள் எவை?

4) தரை அலங்கரிப்பில் நாட்டப்படும் பூக்குந் தாவரங்கள் இரண்டு குறிப்பிடுக.

03. 1) உணவு சமைக்கும் இடம் அதாவது சமையலறை எவ்வாறு அமைத்திருக்க வேண்டும்?

2) சமையலறையில் காணப்படும் கருவிகள், உபகரணங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு அதன் பயன்பாட்டையும் தருக.

3) மாங்காயை எவ்வாறு பல்வேறு நிலைமைகளுக்கு மாற்றலாம்?

4) மாங்காய் துண்டுகள் ஆக்குவதன் மூலம் நமக்கு கிடைக்கும் நன்மைகள் எவை?

04. 1) நீர் குழாய் அமைப்பு ஒன்றினை அமைப்பதற்கு தேவையான துணைக்கூறுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

2) தற்காலிக நீர் விநியோக இணைப்பிற்கான மாதிரிப் படம் ஒன்றினை வரைந்து காட்டுக.

3) நீர் குழாய் தொகுதி அமைப்பதற்கு ஒப்பீட்டு ரீதியாக சிறந்த குழாய் எது?

4) நீர்குழாய் அமைப்பதற்கான துணைக்கூறுகளில் சம அளவான குதை (Eqval Socket) இன் பயன்பாடு என்ன?

05. 1) தனியாள் உரிமை வணிகம் என்றால் என்ன?

2) தனியாள் உரிமை வணிகத்தின் அனுகூலங்கள் எவை?

3) வணிக ஒழுங்கமைப்பு என்றால என்ன?

4) தரை அலங்கரிப்பின் போது எம்மால் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் எவை?

5) உமது சூழலில் நீர் அவதானித்த நியமக் குறியீடு ஒன்றினை வரைந்து அது அடையாளப் படுத்துவது எது என்பதனையும் குறிப்பிடுக.



kalvi.lk



தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

**கட்டண விபரங்கள்**

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
**075 287 1457**